# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 75/19

வாக்குமூலம்..வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆண்டியப்பன் | ஜாதி | |
| த/பெ. | முத்தையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 59 / 2025 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 24.01.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா வழக்கு ஆறுமுகம் மீது தாக்கல் செய்திருக்கிறோம். தாவா வழக்கிற்கான விவரம் எனது அண்ணன் ராதாகிருஷ்ணன் தான் சொன்னார். என்ன பரிகாரத்திற்காக தாவா வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் வீட்டை காலி செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்திருக்கிறோம், ஆறுமுகம் அந்த வீட்டில் 30, 40 வருடங்கள் இருப்பாரா என்றால் அவ்வளவு காலம் இருக்காது. ஆறுமுகம் தாவா வீட்டில் வந்து 25, 30 வருடங்கள் இருக்கும். கருப்பையா வீட்டில் இருந்து கொண்டு சொத்து அவருடைய சொத்து என்று சொல்லி பாலையா என்பவருடன் இணைந்து வழக்கு போட்டாரா என்றால் ஆமாம்.

2. மேற்படி வழக்கு 20 வருடங்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இருக்கலாம். மேற்படி வழக்கு எப்போது தீர்ப்பானது என்பது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வழக்கு தீர்ப்பாகி 15 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் அப்போது வெளிநாட்டில் இருந்தேன். என் தாத்தாவின் பெயர் கருப்பையா ஆகும். அவரது மனைவியின் பெயர் எனக்கு தெரியாது. சாட்சி தற்போது பாட்டியின் பெயர் குப்பம்மாள் என்றும் கூறுகிறார். குப்பம்மாள் மேல்மங்கலத்தில் பிறந்தவர் என்றால் சரிதான். எனது பாட்டி திருமணம் செய்து சிறிது நாட்களில் என் தாத்தா இலங்கை சென்று விட்டார் என்றால் சரிதான். குப்பம்மாள் உடன்பிறந்த ஆண் வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

3. குப்பம்மாள் சொத்துகள் அனைத்தும் கருப்பையாவின் வாரிசுகளுக்குதான் கிடைத்தது என்றால் சரிதான். குப்பம்மாளின் சொத்துகளை என் தகப்பானார் மற்றும் ஆறுமுகத்தின் சகோதரர்கள் மற்றும் காளிமுத்துவின் வாரிசுகள் ஆகியோர் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் சொத்துக்களை தனித்தனியாக பிரித்து கொள்ளாமல் சேர்ந்து தான் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேல்மங்கலத்தில் எங்களுக்கு குடும்ப சொத்து வேறு சொத்து இல்லை என்றால் இருப்பதாக சொல்கிறார்கள்.

எங்கள் அனுபவத்தில் இல்லை.

4. எனது தாத்தாவின் வாரிசுகள் 1)சுப்பையா என்கிற கருப்பையா என்றால் சரியல்ல. அவரது பெயர் கருப்பையா மட்டும்தான். அடுத்த மகன் என் தகப்பானார் முத்தையா என்றால் சரிதான். அடுத்தது காளிமுத்து மகன் என்றால் சரிதான். பிரதிவாதி ஆறுமுகத்தின் தகப்பனார் இலங்கையில் தங்கிவிட்டார் என்றால் சரிதான். இந்தியாவிற்கு எனது தகப்பனார் முத்தையாவும், சித்தப்பா காளிமுத்துவும் வந்து தங்கிவிட்டார் என்றால் சரிதான். சில வருடங்கள் கழித்து பிரதிவாதியின் தகப்பனாரும், பிரதிவாதியும் இந்தியா வந்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியின் சகோதரர்கள் சிலர் இலங்கையில் இன்னும் இருக்கிறார்கள் என்றால் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

5. சொத்துகளை அரசு எடுத்து கொண்டு பட்டா வழங்கிய விவரம் எனக்கு தெரியாது. பட்டா வழங்கும்போது கருப்பையாவின் வாரிசுகளில் எனது தந்தையார் இந்தியாவில் இருந்தார் என்றால் சரிதான். காளிமுத்துக்கு கால் ஊனம் என்றால் சரிதான். என் தந்தை முத்தையாதான் உழைக்கும் நிலையில் இருந்தார் என்றால் சரிதான். அதனால் என் தகப்பனாருக்கு இந்தியாவில் உள்ள சொத்துகளுக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஏலத்திற்கு சென்ற சொத்துகளை மீட்டார். வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.